# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,863 — 1969 ජූලි 18 වැනි සිකුරාදා — 1969.7.18

14,863 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு யூலை மாதம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 767 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 795 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 777 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 787 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 794 | நானாவித அறிவித்தல்கள் .. .. | — |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்,

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
பதில் அரசாங்க அழுத்தகன்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் ; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சா வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் பேர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. **பிற தேவைகள்.**—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவும் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

## கமத்தொழிற்றிணைக்களம்

### படம் வரை தொழில் பயில்வோர் (தற்காலிக) பதவிகள்

கமத்தொழில் திணைக்களத்திலே படம் வரை தொழில் பயில்வோர் (தற்காலிக) பதவிகளுக்கு தொழில்காண் நிலையத்தில் பதிவு செய்துள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற் கேட்டுள்ள விபரங்கள் மட்டும் உள்ள விண்ணப்பங்கள் "பிரதிப் பணிப்பாளர், நிருவாகம், கமத்தொழில் திணைக்களம், பேராதனை" என்னும் முகவரிக்கு 1969 ஆம் ஆண்டு ஆகஸ்து 10 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை அறிவிக்கப்படமாட்டாது.

2. **சம்பள அளவுத் திட்டம்.**—இப்பதவிக்குரிய சம்பளம் ஆண்டொன்றுக்கு ரூபா 960—72 × 2—ரூபா 1,104.

**குறிப்பு.**—பந்திகள் 4 (2) (அ), 4 (2) (ஆ) காட்டும் தகைமைகள் உள்ள வேலையாளர் ஆரம்பச் சம்பளமாக மேற்சொல்லப்பட்ட சம்பள அளவுத் திட்டத்தில் முறையே ரூபா 1,032 ; ரூபா 1,104 பெறத் தகவுடையராவர்.

3. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் நிறுவ வேண்டியன :—

(அ) அவர் இலங்கையர் (இலங்கையர் என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவர்).

(ஆ) 1969 ஆம் ஆண்டு ஜூலை 18 ல் 18 வயதுக்கும் 30 வயதுக்குமிடையினர்.

(இ) சிறந்த நல்லொழுக்கமுள்ளவர் என்பனவாம்,

4. **கல்வித் தகைமைகள்.**—

(1) கணிதம் ஒரு பாடமாகவுள்ள சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் அல்லது கணிதம் சிங்களம்/தமிழ் உட்பட ஆறு பாடங்களில் க.பொ.சா. (சா.நி.) பரீட்சையில் சித்தி. இத்தகைமை இரு அமர்வுக்கு மேற்படா முறையிற் பெற்று பின்வரும் தகைமைகளுள் ஒன்று உள்ளதுமாயிருத்தல் வேண்டும்.

(2) (அ) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் ஓராண்டு முழுநேர நாட்பயிற்சி நெறி (படம் வரை தொழிற் பயிற்சி நெறி) நிறைவேற்றம்

அல்லது

(ஆ) இலங்கை தொழினுட்பக் கல்லூரியில் கனிட்ட தொழினுட்ப உத்தியோகத்தர் (ஈராண்டு) பயிற்சி நெறி நிறைவேற்றம்

அல்லது

(இ) கட்டட நிறுவல் பற்றிய மாலை அல்லது பாக நேரப் பயிற்சி நெறியில் பாகங்கள் 1, 2, 3 நிறைவேற்றம்.

5. **ஒப்பந்த நியதிகள்.**—இப்பதவிகள் தற்காலிகமானவை. பயிற்சி துவங்க முன்னர் தெரிவு செய்யப்படும் அபேட்சகர் படம் வரை அறிஞர் வகுப்பு 2 ல் நியமிக்கப்படவேண்டிய தகைமைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு இத்திணைக்களத்தின் பயிற்சி நெறிப் படிப்பை நேர்மையாகவும் ஊக்கமாகவும் பின்பற்றப் பொறுப்பேற்றும் பயிற்சி முடிந்த பின்னர் தேவையாயின், இத்திணைக்களத்திலே படம் வரை அறிஞர் வகுப்பு 2 ம் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத காலத்துக்குச் சேவை செய்யச் சம்மதித்தும் கமத்தொழில் திணைக்களத்துடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளுதல் வேண்டும். நிபந்தனைகள் நிறைவேற்றப்படுதலை உறுதிப்படுத்தும் முகமாக பயிலுவோரும் அவர்களின் பெற்றோரும்

அல்லது பாதுகாவலரும் பிணை நிற்போர் இருவரும் இத்திணைக்களத்தால் தீர்மானிக்கப்படும் தொகைப் பணத்துக்கு ஒரு முறியிற் கைச்சாத்திடுதல் வேண்டும்.

படம் வரை அறிஞராகப் பயிலுவோர் எவரினதும் வேலையும் நடத்தையும் திருப்தியற்றதாயின் அல்லது எவரும் பொருத்தமான பரீட்சையிற் சித்தியெய்தத் தவறினும் அன்னவரின் சேவைகள் நிறுத்தப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்.**—படம் வரை தொழில் பயில்வோர் பின்வருமாறு பயிற்றப்படுவர்.

பந்திகள் 4 (2) (அ), 4 (2) (இ) ஆகியவற்றின் கீழ் தகைமை பெறும் அபேட்சகர்கள் இத்திணைக்களத்தில் ஈராண்டுக்குச் செய்முறைப் பயிற்சி பெற்று வருகையில், பந்தி 4 (2) (ஆ) ன் கீழ் தமைகை பெறுவோர் இத்திணைக்களத்தில் ஓராண்டுக்குச் செய்முறையிற் பயிலுவர்.

செய்முறைப் பயிற்சியைச் சித்தியாக நிறைவேற்றிக் கொள்வதுடனும் இத்திணைக்களப் பொருத்தப் பரீட்சையிற் சித்தியாவதுடனும் அபேட்சகர்கள் படம் வரை அறிஞர் வகுப்பு 2 ல் நியமனங்கள் பெறத் தகுதியுடையோராவர்.

7. விண்ணப்பகாரர் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூல ஓலைகள் அல்ல) அணைத்தல் வேண்டும் :—

(அ) பெற்றுள்ள உச்ச கல்வி, தொழினுட்ப தகைமைகளின் சான்றிதழ்

(ஆ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்பட மாட்டாது).

(இ) பண்புச் சான்றிதழ் மூன்று, இவற்றிலொன்று அபேட்சகர் கடைசியாகப் படித்த பாடசாலைத் தலைவரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—கல்விச் சான்றிதழ்களினதும் நற்சான்றிதழ்களினதும் பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

8. விண்ணப்பகாரர் தங்கள் பணச் செலவில் கொழும்பிலே நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்படுமிடத்து வருதல் வேண்டும்.

9. விண்ணப்பங்களில் உள்ள விவரங்கள் எதுவும் பொய்யானதென்றோ தவறானதென்றோ தேர்வுக்குமுன் கண்டுபிடிக்கப்பட்டால் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் நியமனத்துக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நஷ்டஈடு எதுவுமின்றி வேலையினின்று நீக்கப்படுவதற்கும் சம்பந்தப்படும் விண்ணப்பகாரர் பாத்திரவாளியாவர்.

10. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றைப் பார்க்க.

எல். பி. மாரம்பே,
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்).

கமத்தொழில் திணைக்களம், பேராதனை,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 2 ந உ.

## படம் வரை தொழில் பயில்வோர் பதவிகளுக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பகாரரின் முழுப்பெயர் (துலக்கமாக) :————.
(அ) குடும்பப்பெயர் :————.
(ஆ) பிறபெயர்கள் :————.
2. விலாசம் :————.
3. நாட்டினம் :————.
4. (அ) பிறப்புத் தேதியும் இடமும் :————.
(பிறப்புப் பதிவுச் சான்றிதழின் பிரதி அணைக்குக)
(ஆ) பிறப்பிடம் :————.
(1) தந்தையின் :————.
(2) தந்தைவழிப் பாட்டனரின் :————.
(3) தந்தைவழிப் பூட்டனரின் :————.
விண்ணப்பகாரர் இலங்கையிலே பிறந்தவராயின் (அ) (1) அல்லது (2) ம், (3) ம் நிரப்புக. விண்ணப்பகாரர் இலங்கையிலே பிறவாதவராயின் (ஆ) (1) ம், (2) அல்லது 3 ம் நிரப்புக.
5. கல்வித் தகைமைகள் :————.
(பரீட்சையிற் சித்தியடைந்த மாதமும் ஆண்டும், சித்தியடைந்த பாடங்களும் ஒவ்வொரு பாடத்திலும் கிடைத்த தராதரமும் கூறுக).
6. தொழினுட்பத் தகைமைகள் :————.
7. விவாகமாகினவரா இல்லையா ? :————.
8. நற்சான்றிதழ்கள் தந்துள்ளோரின் பெயர்கள் :————.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

இடம் :————.
தேதி :————.

7–621—18.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,863

---

இல. A 94/X 2114/68

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### அரசினர் கலை, கலைப்பணி கல்லூரி அதிபர் பதவி

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள அரசினர் கலை, கலைப்பணி கல்லூரி அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, த. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.8.1

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 1969.8.8

**குறிப்பு.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும், மேலும் அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

**நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்தற்றதுமாகும். அரசாங்க சேவை சகாய நிதிக்கு கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர் ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவராயின் இப்பதவியில் ஒரு வருடத்துக்குப் பதில் கடமை புரிபவராக நியமிக்கப்படுவார். அவருடைய சேவை திருப்தியற்றதாகக் காணப்படின், பதில் கடமை புரியும் காலத்தில் அல்லது அக்கால முடிவில் அவருடைய முன்னைய பதவிக்கு அவர் திருப்பி அனுப்பப்படுதற்குப் பாத்திரராவர்.

(iii) தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர் அரசினர் சேவையில் இல்லாதவராயின் அவர் 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார். தகுதிகாண் காலத்தைத் திருப்தி கரமாகப் பூர்த்தி செய்தபின் அவர் நியமனத்தில் உறுதிப் படுத்தப்படுவார்.

(iv) நியமதாரிகள், நிரந்தரக் காரியதரிசியால் கேட்கப்படின், அரசினர் உத்தியோகத்தர்கள் (பிணைச்) சட்டத்துக்கமைய பிணை கட்ட வேண்டும்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 8,400—480 × 6 —ரூ. 11,280 – வருடாந்தம்.

4. **தேவையான தகைமைகள்**— ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(i) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவரா யுமிருத்தல் வேண்டும்.

(ii) 1969 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 1 ந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் அல்லது கலா நிலையத்தால் வழங்கப்படும் பட்டம் அல்லது தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும். அல்லது பெற் றிருப்பதுடன் கடல்கடந்த அங்கீகரிக்கப்பட்ட ஒரு கலா நிலையத்தில் 3 வருட பயிற்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது சமமான தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

(iv) 10 வருடங்களுக்குக் குறையாத செயல்முறை அனுபவமும் கற்பித் தல் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும் அல்லது 10 வருட செயல் முறை அனுபவம் பெற்றிருப்பதுடன் பிரபல்யம் வாய்ந்த கலைஞரை பெயர் பெற்றிருக்க வேண்டும். அல்லது அங்கீகரிக்கப் பட்ட ஒரு நிலையத்தில் அல்லது கல்லூரியில் 5 வருட நிர்வாக அனுபவம் பெற்றிருப்பதுடன் சிற்பியாக அல்லது அமைப்பாளராக இருக்க வேண்டும்.

(v) கலைகளிலும் கலைப்பணிகளிலும் சிறந்த ஆற்றலும் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். கலை சம்பந்தமான தமது ஆக்கங்களை இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கண்காட்சிகளுக்கு அனுப்பி யுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(vi) உலகத்திலுள்ள சிறந்த கலாமன்றங்கள், கலா நிலையங்கள், கலைக் கல்லூரிகள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருத்தல் மேலதிக தகைமையாகும்.

(vii) உள்ளூர்க் கலைகள், கலைப்பணிகள், வரலாறு ஆகியவை பற்றிய பரந்த அறிவு அத்தியாவசியம்.

**குறிப்பு.**—மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் கொண்ட விண்ணப்பதாரிகள் இல்லாவிடின் சிறந்த தகைமைகளைக் கொண்ட அபேட்சகர்களின் விண்ணப்பங்கள், மேற்போந்த 4 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்வாக அனுபவத்தைப் பெற்றிராவிடினும், ஏனைய தகைமைகளைப் பெற்றிருக்கு மிடத்து சீர்தூக்கப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப் பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர். கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயி ருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர், தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற் றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங் கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங் களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படு தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ ” எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்பு களையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை என முகவரியிட் டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தி யோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ அ ” எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறி வுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற் றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்ச கர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதி யிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 11 ந உ.

7–836/1—18.7.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,863

---

No. AB. 60/X. 2115/69.

## உள்ளூராட்சி அமைச்சு—நாடுநகர நிர்மாணப்பிரிவு

### தகுதிகாண்நிலை நகரநிர்மாண உதவியாளர் பதவிகள்

உள்ளூராட்சி அமைச்சு நாடுநகர் நிர்மாணப் பிரிவு, தகுதிகாண் நிலை நிர்மாண உதவியாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிடட் படிவங்களில் எழுதப் பெற்றுச் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும் :—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 1.8.1969

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 8.8.1969

**குறிப்பு :**—(1). அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப் பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப் படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக வரவிருப்ப வர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதை விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர் பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமத மாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவ னிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித்திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனுலா கும் இடத்திற்குத் தாமே பொறுப்பாவார்.

(3) வெளிநாட்டில் உள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளில் உள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடநலமுடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவோர்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணஞ் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **ஒப்பந்தத்தின் நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(1) இப்பதவிகள் நிரந்தரமானதும் உபகாரச்சம்பளம் இல்லாததுமாகும். விண்ணப்பகாரர் மூன்று வருட காலத்திற்குப் பரீட்சார்த்த நிலையில் வைக்கப்படுவர்.

(2) தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் வெளிநாடு சென்று நகர நிர்மாண அமைப்புப்பற்றி பயிற்சி பெறும் வாய்ப்பைப் பெறுவர்.

3. **சம்பளமும் படிகளும் :** இப்பதவிகளுக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :— ஆண்டுக்கு 360 ரூபாவாகிய ஆறு ஆண்டு ஏற்றங்களுடன், 4,080 ரூபாவிலிருந்து 6,240 ரூபாவரை செல்லும்.

4. **தேவையான தகைமைகள் :** ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்றுகள் காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர்கள் சிறந்த நற்குணமுடையவராயும், உடநலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1969.8.1 தேதியில் 35 வயதிற்கு மேற்படாமலும் 22 வயதிற்குக் குறையாமலும் இருக்கவேண்டும். (எற்கனவே அரசினா சேவையில், உள்ளவர்களுக்கு இவ்வயதுக்கட்டுப்பாட்டின் எல்லைகள் அமையாது).

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பொருளாதாரத்தில அல்லது சமூகவியலில் விசேடப்பட்டம் பெற்றவராளாக இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் **(முக்கிய குறிப்பு :—** சமயதீட்சைச் சானறிதழ் அல்லது உதவிநனகொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச்சான்றிதழ்.

(இ) நற்சான்றிதழ் இரண்டு ; இவற்றில் ஒன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடம் இருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழிற் தகைமையும், தொழில்நுட்பத் தகைமையும் ; உயர்தொழிற் தகைமை அல்லது தொழில் நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு :—**(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவங்களுடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களை தொடர்பான திணைக்களங்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித்திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("ஆ" எனக்குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதங்களையும் செயலாளர், அரசாங்கசேவை அதிகாரசபை, என முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்தில் உள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையில் உள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம். பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப்பார்க்க.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறிப்பிட்டுள்ளது) அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பி திருப்பி அனுப்பதல வேண்டும். அவவாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபறறி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித்திகதியில் இருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த எற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் அவ்விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆடு யூலை மீ 11 ந உ.

7–836/2—18.7.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,863

---

இல : AB 62/X 216/69

## தபால் தந்திப் போக்குவரத்துத் திணைக்களம்

### போக்குவரத்து, நிதி அதிகாரிப் பதவி
### கடல் கடந்த தந்திப் போக்குவரத்துச் சேவை

தபால் தந்திப் போக்குவரத்துத் திணைக்களத்தின் கடல் கடந்த தந்திப் போக்குவரத்துச் சேவையில், போக்குவரத்து நிதி அதிகாரிப் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிடட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர் அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல : 500, கொழும்பு 1 என்ற முகவரிக்கு பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் 1969.8.1

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் 1969.8.8

**குறிப்பு—**(1) அச்சிட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரி இடப்பட்டதும் 9" × 4" அளவில் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும் அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லாதவரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் திகதிவரை பொறுத்திருப்பவர்கள் அதனால் ஏற்படும் இடருக்கும் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாடுகளில் உள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களை பிறநாடுகளில் உள்ள இலங்கை அரசாங்க பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினல் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாக இருக்கிறார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவ சோதனை செய்வதின் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :** பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையதுமாகும். இப்பதவி மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். கைம்பெண், அனுதைகள் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டத்திற்கு உதவுதொகை செலுத்தப்படும்.

சுமார் ஆறுமாத காலத்திற்கு வெளிநாட்டில் பயிற்சி அளிக்கப்படும். வெளிநாட்டிற்குப் போவதற்கு முன்னதாக இலங்கை தபால் தந்திப் போக்குவரத்துத் திணைக்களத்தின் கிளைகளில் சுமார் மூன்று மாத காலம் வேலை அனுபவம் பெற வேண்டும்.

**படிகளும் மற்றவைகளும் :** வெளிநாட்டில் பயிற்சி பெறும் காலத்தில் அரசாங்கம் செயற்படுத்தும் நியதிகளின்படி படிகளும் மற்றவைகளும் வழங்கப்படும். பரீட்சார்த்தி பயிற்சிக்கு அனுப்பப்படும் முன்னதாக இலங்கை அரசாங்கத்துடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளுமாறு வேண்டப்படுவர். அதாவது ;

(1) மற்றைய கருமங்களுடன், உண்மையாகவும், கவனமாகவும் குறிப்பிட்ட பயிற்சிக் காலத்தில் நடந்து திருப்திகரமாகப் பயிற்சியை முடித்து இலங்கை அரசாங்கத்தில் கடமையாற்றல் வேண்டும். தேவைப்பட்டால் குறிக்கப்பட்ட கால எல்லைக்கு (அரசாங்கம் தீர்மானித்தபடி) பயிற்சியின் பின் கடமையாற்ற வேண்டும். அத்துடன்;

(2) உடன்படிக்கையில் குறிப்பிட்ட கொள்கைகளுக்கும் நியதிகளுக்கும் அமைய நடக்கத் தவறினல் அவர்கள் பயிற்சிக் காலத்தின் முழு செலவுகளும் அதாவது இலங்கை அரசாங்கம் செய்த எல்லா செலவுகளும் அல்லது மற்றைய ஸ்தாபனங்கள் வழங்கிய நன்கொடை முதவியனவும் – உதாரணமாகச் சம்பளம் படிகள், பிரயாணச் செலவுகள் கட்டுப்பணம் முதலியனவும், பயிற்சி சம்பந்தமாகத் தொடர்புடைய எல்லா செலவுகளும் இலங்கை அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்துவதாக உறுதியளித்தல் வேண்டும்.

3. **சம்பளமும் படிகளும் :** இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :— ஆண்டொன்றுக்கு ரூபா 4,080 முதல் ரூபா 360 கொண்ட 12 சம்பள உயர்வுகளும் ரூபா 480 கொண்ட 10 உயர்வுகளுமாக ரூபா 13,200 வரை (ரூபா 8,400 க்கும் ரூபா 11,760 க்கும் முன்னதாக திறமைத்தடையும் ரூபா 11,280 ல் இரண்டு வருட நிறுத்தமும் உடையது.)

4. **தேவையான தகைமைகள் :** ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1969.8.1 ஆம் திகதிக்கு இருபத்தியொரு வயதிற்குக் குறையாமலும் முப்பத்தைந்து வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு இல்லை)

(இ) (1) புள்ளி விபரம் அல்லது கணக்கியலுடன் பொருளாதாரத்தில் பல்கலைக் கழகப் பட்டம், அல்லது;

(2) பௌதீகம், கணிதத்தில் பி. எஸ். சி.(விசேட) பட்டம், அல்லது;

(3) கணிதத்தையும் பௌதீகத்தையும் பாடங்களாகக் கொண்ட 1 வது அல்லது 2 வது வகுப்பு ஆனர்ஸ் பி. எஸ். சி. (பொது) பட்டம் உடையவராகவும் அல்லது;

(4) ஐக்கிய இராச்சிய அல்லது இலங்கை இன்ஸ்ரியுட் ஒவ் சார்டேட் எக்கவுண்டன்ஸ் (கணக்காளர்) அல்லது சொசையிட்டி ஒவ் இன்கோப்பரேட்டட் அக்கவுண்டன்ஸ், ஐ. இ. (யூ. கே) அல்லது இலங்கை கணக்காளர் சபை அல்லது அசோசியேசன் ஒவ் சேர்டிவைட் அன்ட கோபரேட் அக்கவுண்டன்ஸ் (லண்டன்) பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**குறிப்பு:** சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது)

(ஆ) பல்கலைக் கழகப்பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) நற்சான்றிதழ் இரண்டு; இவற்றில் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்வி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாய் இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழிற் தகைமையும் தொழிநுட்பத் தகைமையும் பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ். **குறிப்பு :** (1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிவங்களையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாய் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " குறியிடப்பட்டது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை என்ற முகவரியிடப்பட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்தில் உள்ள எந்த உத்தியோகத்தர்களுக்கும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்கசேவையிலுள்ள பதவிகளுக்காகிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறிக்கப்பட்டது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பி திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைகமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
த. பெ. 500, காலிமுக செயலகம்.
கொழும்பு, 1, 11 7.1969.

7–836/3—18.7.69 ந் திகதிய வர்த்தமானி இல.14,863

## பதிவாளர் நாயகத்தின் திணைக்களம்

### பதிவாளர் சேவையில் II ந் தரப் பதிவாளர் பதவி

பதிவாளர்நாயகத்தின் திணைக்களத்தில், பதிவாளர் சேவையில் II ந் தர பதிவாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **சம்பளம்.**—ரூபா 5,580 லிருந்து, 240 ரூபாவுடைய நான்கு வருடாந்த சம்பள ஏற்றங்களுடன், ரூபா 6,540 வரை.

2. **விண்ணப்பங்கள்.**—விண்ணப்பங்கள் எல்லாம் கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப் படிவம் போன்ற படிவத்தில் நிரப்பி, விண்ணப்பதாரர்கள் தாங்கள் கடமை பார்க்கும் திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாக, 1969 ஆகஸ்ட் 18 ந் திகதி அல்லது அதற்கு முன்னர் இவ் அலுவலகத்திற்கு வந்து சேரும்படியாக அனுப்புதல் வேண்டும்.

3. **தகவுத்திறன்.**—விண்ணப்பதாரர்கள் பதிவாளர் சேவையின் III ந் தர பதிவாளர்களாகவோ, அல்லது பொது எழுதுவினைஞர் சேவையில் நிர்வாக எழுதுவினைஞர் வகுப்பு விசேட தர உத்தியோகத்தர்களாகவோ, அல்லது நிர்வாக எழுதுவினைஞர் வகுப்பு I ம் தரத்தில் 4 வருட காலம் சேவையாற்றி அமைப்பு, நிர்வாகத் திறன்படைத்த உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும்.

இத்திணைக்களத்தின் வேலைகள் தொடர்பாக, காணிப்பதிவகங்கள் மாவட்டப் பதிவகங்கள் சம்பந்தமான வேலைகளில் பெற்ற அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

4. **ஒப்பந்த நிபந்தனைகள் :**

(அ) பதவிகள் நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம்பெறுவதற்கு உரித்துடையனவுமாகும். விதவை, அனாதை இளைப்பாற்றுச் சம்பளத்திட்டத்திற்கு சம்பளத்தில் ஒரு பகுதி வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) பொது எழுதுவினைஞர் சேவையிலிருந்து ஒரு உத்தியோகத்தர் இந் நியமனத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டால்,

(i) ஆரம்பத்தில் இந் நியமனம் 1 வருடகாலத்திற்கு பதில் கடமை பார்க்கும் நியமனமாக இருக்கும். பதில் கடமைபுரியும் காலத்தில் நியமனம் பெற்றவருக்கு, பதில் சேவை ஆற்றுவதற்குரிய பிரமாணங்களின் நிபந்தனைக்கமைவாக பதில் சேவைச் சம்பளம் வழங்கப்படும்.

(ii) இந் நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டதும் இவ் உத்தியோகத்தர் பொது எழுதுவினைஞர் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவதுடன், அச் சேவைக்கு திரும்பிச்செல்லும் உரிமையும் அற்றவராவார்.

(இ) இந் நியமனத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர் முன்னதாக இத் திணைக்களப் பரீட்சையில் சித்தியடையாதிருந்தால் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள், திணைக்களத்தினால் பரிபாலிக்கப்படும் பல்வேறு விதமான சட்டங்கள் பற்றிய அறிவு சம்பந்தமாகவும் திணைக்களப் பிரமாணங்கள் சம்பந்தமாகவும், ஒரு திணைக்களப் பரீட்சையில் சித்திபெறுமாறு வேண்டப்படுவார். குறிப்பிட்ட இப்பரீட்சையில் சித்தியடையத் தவறினால் சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்படும். இரு வருட காலத்திற்குள் இப்பரீட்சையில் சித்தியடையத் தவறினால் 1 வது சம்பள உயர்வு, மீண்டும் ஒருவருட காலத்திற்குள் அப்பரீட்சையில் சித்தியடையும்வரை பிற்போடப்படும். இரு வருட காலத்திற்குள் இப்பரீட்சையில் சித்தியடைந்தால் சம்பள உயர்வு உரிய திகதியிலிருந்து வழங்கப்படும்.

(ஈ) தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர், திணைக்களத்திற்குள் பதிவாளர் சேவையினுள்ள எந்தவிதமான பதவிக்கும், மாற்றம் செய்யப்படுவார்.

(உ) தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர், குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏறபாடுகளுக்கும், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும், விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

5. விண்ணப்பங்களையும், அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும், பதிவாளர் நாயகத்திற்கு முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயின்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் அனுப்பக்கூடாது.

6. இது தொடர்பாக, இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டிருக்கும், அரசாங்க சேவையினுள்ள பதவிகளுக்கு காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

ஆர். சமரசேகரா,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகத்தின் அலுவலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு யூலை மீ 11 ந உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

#### பதிவாளர் சேவையில் II ந் தரப் பதிவாளர் பதவி

1. முழுப் பெயர் : ———.
(தெளிவான எழுத்தில்)
பெயர் : ———.
மற்றைய பெயர்கள் : ———

2. விலாசம் : ———.

3. பிறந்த திகதி : ———.

4. (அ) அரசாங்கத்தின் கீழ் விண்ணப்பதாரர் தற்பொழுது வகிக்கும் பதவி : ———.
(ஆ) பல்வேறு திணைக்களங்களிலும் கடமையாற்றிய சேவைக்கால விபரங்களுடன் அரசாங்கத்தின் கீழ் சேவையாற்றிய காலம் : ———.
(இ) பொது எழுதுவினைஞர் சேவையில் நிர்வாக எழுதுவினைஞர் வகுப்பின் விசேட தரமா, அல்லது I ந் தரமா என்ற விபரமும், அந்த தரத்தில் சேர்ந்த திகதியும் : —
(i) தரம் : ———.
(ii) சேர்ந்த திகதி : ———.

5. பதிவாளர் நாயகத்தின் திணைக்கள அலுவல்கள் சம்பந்தமாக அனுபவம் (ஏதாவது இருப்பின்) : ———.

6. (அ) சிங்களத்தில் சித்தியடைந்த பரீட்சை : ———.
(ஆ) தமிழிலும், ஆங்கிலத்திலும் உள்ள அறிவு : —
(i) தமிழ் : ———.
(ii) ஆங்கிலம் : ———.

7. ஏதாவது விசேட தராதரங்கள், தகுதிகள் இருப்பின் அவை தொடர்பான விபரங்கள் : ———.

8. வேறு ஏதாவது விபரங்கள், இவை தொடர்பாக விண்ணப்பதாரர் தர விரும்பின், அவை பற்றிய விபரங்கள் : ———.

இவ் விண்ணப்பத்தில் என்னால் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் அடங்கியுள்ள எந்த விபரங்களும் பொய்யானவை அல்லது பிழையானவை என்று காணப்பட்டால் தெரிவு சமயத்தில், அல்லது தெரிவுக்கு முன் நான் வேலை நீக்கம் செய்யப்படுவதற்குரியவராவேன் என்பதையும், நியமனத்திற்குப்பின் இப் பிழை கண்டுபிடிக்கப்பட்டால் எந்தவித நஷ்டஈடுமின்றி வேலை நீக்கத்திற்குள்ளாவேன் என்பதையும் நான் அறிந்துள்ளேன்.

———.
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ———.

7–790—18.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,863.

---

## பொலிசுத் திணைக்களம்

### பொலிசு வானொலிப் பகுதியில் தொழில் நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு வெற்றிடங்கள்

மேலே குறிப்பிட்டுள்ள தலையங்கத்தின் கீழ் 6.6.1969 ம் திகதிய 14,857ம் இலக்கத்தைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியில் 6 ம் பந்தியில், " திணைக்கள விண்ணப்பங்கள் " என்ற தலையங்கத்தின் கீழுள்ள (ii) பகுதியில் உள்ளவற்றை,

(ii) தெரிவு செய்வதற்கான கணிதமுறை தரம் II என்றிருப்பதை

(ii) தந்திப் போக்குவரத்துக்கான கணிதமுறை தரம் II என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும்.

ஈ. எல். அபயகுணவர்த்தன,
பொலிசு அதிபர்.

பொலிசுத்தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 1, 8 ஜூன், 1969.

7–759—18.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,863

## தச்சர் வேலைக்கு வெற்றிடம்

இரத்மலானையில் இருக்கும் பொது வேலைத் திணைக்களத்தின், புது வீடுகள் நிர்மாணத் திட்டத்தில் நாள் கூலிக்கு III தர, தச்சுவேலைக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 5.8.69 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தரம் | தேவைப்படும் தகைமைகள் | நாள் ஒன்றுக்கு கூலி ரூ. ச. |
|---|---|---|
| III | (1) விண்ணப்பதாரர் மூன்று வருடகாலத்திற்கு சட்ட முறைப்படியான ஸ்தாபனத்தில் வேலை செய்திருக்க வேண்டும். இதற்கு அத்தாட்சியாக, அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும் .. | 1.80 |
| | (2) விண்ணப்பதாரர் 25 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். | |

(3) நாள்படியுடன் அரசாங்க விகிதப்படி வாழ்க்கைச் செலவும் விஷேச வாழ்க்கைப்படியும் வழங்கப்படும். திறமையுடன் வேலை செய்பவர்களுக்கு 3 ம் தரத்தில் இருந்து 2 ம் தரத்திற்கு உயர்த்தப் படலாம்.

(4) விண்ணப்பதாரர், பிரதான நிர்மாண பொறியியலாளர் (கட்டிடங்கள்) தபால் பெட்டி இலக்கம் 6, மொறட்டுவ என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும் ; அவரின் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

எச். சி. டி. த சில்வா,
பிரதான நிர்மாண பொறியியலாளர்,
(கட்டிடங்கள்).

தபால் பெட்டி இலக்கம் 6,
மொறட்டுவ.

7-755—18.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,863

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### வெற்றிடங்கள்

### பொறியியலாளர் பதவிகளும் உதவி பொறியியலாளர்களும்

கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தில் ஆலைப் பொறியியலாளர் மற்றும் உதவிப் பொறியியலாளர் பதவிகளுக்கு உயர் தொழிற் தகைமையுடைய பொறியியலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு கடதாசிக்கூழ் மற்றும் கடதாசி தொழில்நுட்பவியல் சம்பந்தமாக அந்நிய ஆலோசகர்களின் கீழ் அனுபவம் பெறுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்படும். அதன்பின்பு வெளிநாட்டில் விசேட பயிற்சி பெறக்கூடிய வாய்ப்புகளும் அவர்களுக்கு உண்டு.

**வயது** — 25 லிருந்து 40 வரை.

தகைமைகள் மற்றும் அனுபவம் ஆகியவற்றிற்கேற்ப கைத்தொழில் கடற்றொழில் அமைச்சின் அங்கீகாரத்துடன சம்பளம் நிர்ணயிகப்படும்.

விண்ணப்பங்கள் 1969–ம் ஆண்டு ஜூலை மாதம் 30 ந் திகதி முடிவடையும். இக்காரியாலத்தில் கிடைக்கப்பெறும் படிவங்களில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து இதன் கீழ் கையொப்பமிட்டுள்ளவருக்கு மேற்குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

தி. ப. நாரன்னுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

135, யூனியன் இடம்,
த. பெ. 1367,
கொழும்பு 2,
8.7.69.

7-804—18.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14.863

---

## கல்வி, கலாச்சாரஅலுவல்கள் அமைச்சு

### அரசினர் ஆசிரியர் கல்லூரிகளில் வரைதல் போதனாசிரியர்/போதனாசிரியை பதவிகள்

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள அரசினர் ஆசிரியர் கலாசாலைகளில் வரைதல் போதனாசிரியர்/போதனாசிரியை (சிங்கள, தமிழ் மொழி மூல) பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் படிவமுறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நிரந்தரக் காரியதாரிசி, கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு, (ஆசிரியர் கலாசாலைகள் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

**குறிப்பு** :—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அபேட்சகர்கள் இவ்வறிவித்தல் காணப்படும் மாதிரிப் படிவத்துக்கமைய விண்ணப்பப் படிவத்தைத் தயாரிக்க வேண்டும்.

(ii) விண்ணப்பம் யாதேனும் அஞ்சலில் தாமதமாகியது அல்லது காணமற் போனது என்னும் குற்றச்சாட்டெதுவும் சீர்தூக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களை கடைசி நாள்வரை தாமதிக்கும் விண்ணப்பதாரிகள் தமக்கு இடரை விளைவித்துக்கொள்வார்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(v) ஒரு பரீட்சார்த்தி அஞ்சல் தந்தி பயிற்சிப் பாடசாலையில் முழுப் பயிற்சியையும் முடிக்குமுன் தனது வேண்டுகோளின்படி வேலையிலிருந்து நீங்குவாராயின் அவர் அஞ்சல் தந்தி பயிற்சிப் பாடசாலையில் இருக்கும்போது பெற்ற படிகள் முழுவதையும் திருப்பிக் கொடுக்கும்படி வேண்டப்படுவர்.

(vi) பூரணமான ஆறுமாதப்பயிற்சி முடிக்காது அஞ்சல் அதிபர் தந்தியாளர் தரத்துக்கு நியமிக்கப்படும் பரீட்சார்த்திகளை அஞ்சல் தந்தி பயிற்சிப் பாடசாலைக்குப் பயிற்சியளிக்கப் பின்னர் அழைக் கும்போது பயிற்சி முடிவுற்ற நாளிலிருந்து மூன்று வருடங்கள் முடியுமுன்னர் அஞ்சல் அதிபர் தந்தியாளர் சேவையிலிருந்து விலகுவார்களாயின் பயிற்சிக் காலத்தில் அவர்கள் பெற்ற எல்லாப் பணத்தையும் திருப்பிக் கொடுப்பதாக உடன்படிக்கை யைப் பரீட்சார்த்திகள் செய்தல் வேண்டும்.

(vii) அஞ்சல் அதிபர்கள் தந்தியாளர்கள் போயா நாட்களும் விடுமுறை நாட்களும் உட்பட எல்லா நாட்களிலும் வேலைசெய்ய வேண்டி நேரிடும். அவர்கள் போயா நாட்களில் பொது விடுமுறைகளைத் தவிர்ந்த விடுமுறைநாட்களில் வேலை செய்வதற்கு எவ்வித மேலதிக சம்பளத்துக்கும் உரித்துடையவராகார். பகலில் அல்லது இரவில் எந்த நேரத்திலாவது ஆரம்பிக்கும் அல்லது முடியும் வேலை நேரங்களிலும் அவர்கள் வேலை பார்க்க வேண்டும். அவர்கள் இடமாற்றத்துக்கும் இலங்கையில் எந்தநிலையத் திலாவது நியமிக்கப்படுவதற்கும் ஆளாவார்.

(viii) அஞ்சல் அதிபர்களும் தந்தியாளர்களும் 2,000 ரூபா பிணைப் பணம் கட்டவேண்டும். வேதனம் 1,000 ரூபாவுக்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் மாதாந்தம் 7 ரூபா 50 சத விகிதப்படியும் வருடாந்த வேதனம் 1,000 ரூபாவுக்கு மேற்படும் சந்தர்ப்பத்தில் மாதாந்தம் 10 ரூபா விகிதப்படியும் கழிக்கப்படும்.

(ix) அஞ்சல் தந்தி திணைக்களத்தில் அஞ்சல் அதிபரும் தந்தியாளரு மாகத் தெரியப்படும் பரீட்சார்த்திகள் தாங்கள் செய்து கொள்ளும் ஒப்பந்தத்திற் கூறப்பட்டபடியன்றி வேறு எந்த அரசாங்கப் பகுதிப் பரீட்சைக்காயினும் சமுகமளிக்கவோ அல்லது விண்ணப் பிக்கவோ அல்லது வேறு எந்த அரசாங்கப் பகுதியிலாவது நியமனம் பெறவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(x) நியமனம், வியவகார கைநூல், அரசாங்க சேவை அதிகாரசபை விதிகள், நிதிப்பிரமாணங்கள், இந்தத் திணைக்களக் கட்டளைகள், அரசாங்கத்தால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் வேறு விதிகள் பிரமாணங்கள் ஆகியவற்றுக்கு உட்பட்டதாகும்.

(xi) இலங்கையில் எப் பகுதியினும் சேவை புரியத் தகுதியான தேகாரோக்கியம் உடையவர்களாவென அறிவதற்காக, சித்தியடை யும் பரீட்சார்த்திகள் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரால் செய்யப்படும் வைத்தியப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். இப்பரீட்சையிற் தகுதியற்றவரெனக் காணப்படும் பரீட்சார்த்தியின் தற்காலிக நியமனம் தள்ளுபடி செய்யப்படும்.

(xii) சித்தியடையும் பரீட்சார்த்திகள், அரசாங்கத்தின் மொழிக் கொள் கையை நிறைவேற்றுவதற்காக, பிரதானமாக 1956 ம் ஆண்டின் அரசியல் மொழிச் சட்டம் இல. 33 ல் கூறப்பட்டுள்ளவற்றை நிறைவேற்றுவதற்காக இதுவரை தயாரிக்கப்பட்ட எந்த விதிக்கும் அல்லது இனிமேல் தயாரிக்கப்படக்கூடிய விதிகளுக்கும் இணங்கி நடத்தல் வேண்டும்.

(xiii) சிங்கள மொழியில் இந்தப் பரீட்சையை எடுக்காத பரீட்சார்த்திகள் நியமனத்துக்குத் தெரியப்பட்டால் தங்களின் தகுதிகாண் காலத் தில் சிங்களம் கற்க வேண்டும். கீழே கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் பரீட்சார்த்திகள் சிங்களத்தில் தகுதிகாண் பரீட்சை களில் சித்தியெய்தல் வெண்டும்.

**பரீட்சையில் சித்திபெற வழங்கப்பட்டிருக்கும் கால எல்லை**

**பரீட்சைத் தரம்**

தகுதிகாண் பரீட்சைத்தரம் 1 . . நியமனத்திகதியிலிருந்து 1 வருடத்திற்குள்
தகுதிகாண் பரீட்சைத்தரம் 2 . . நியமனத்திகதியிலிருந்து 2 வருடத்திற்குள்
தகுதிகாண் பரீட்சைத்தரம் 3 . . நியமனத்திகதியிலிருந்து 3 வருடத்திற்குள்

தகுதிகாண் காலமுடிவில் இப்பரீட்சார்த்திகளை அவர்களது நியமனங் களில் உறுதிப் படுத்துவதும், அவர்களுடைய நன்னடத்தை, வேலைத்திறன் ஆகியவற்றிலும் மேலே குறிப்பிட்ட தரப் பரீட்சைகளில் வரையறுக்கப்பட்ட காலங்களில் சித்தியெய்துவதிலும் தங்கியிருக்கும். பரீட்சைகளில் குறிப் பிட்ட காலத்திற்குள் சித்தியெய்தாவிடின் அவர்கள் சம்பள உயர்வு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படும். குறிப்பிட்ட காலத்தின் பின் மேலும் 6 மாதங்களில் அவர்கள் சித்தியெய்தத் தவறின் சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்படும். இது பரீட்சை சித்தியடையும்வரை அமுலி லிருக்கும். தகுதிகாண் எல்லைக்குள் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையாது விட்டால் 120–121 ம் பரிபாலனப் பிரமாண விதானத் தின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

(xiv) இப்பரீட்சையைச் சிங்களம் அல்லது தமிழ் மூலம் எடுத்துச் சித் தியெய்தும் பரீட்சார்த்திகள் அவர்களுக்காக ஒழுங்கு செய்யப்படும் ஒரு ஆங்கில மொழிப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

9. **விண்ணப்பங்கள் :—**

(i) இந்தப் பரீட்சைக்காகிய விண்ணப்பங்களை கொழும்பு, லோற்றஸ் வீதி, அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் தலைமை அலுவலகக் கட்டிடம், 6 வது மாடியிலுள்ள அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரினதும் அலுவலகத்திலிருந்து 1969 ம் ஆண்டு ஒகத்து மாதம் 25 ந் திகதி வரை பெறக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் தயாரிசெய்து அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபருக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

**குறிப்பு :—**

அச்சிடப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களில் பரீட்சார்த்திகள் எவ்வித மான மாற்றமும் செய்யக்கூடாது. இப்பரீட்சைக்குரிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) பூர்த்தி செய்யப்பட்ட பத்திரங்களைப் பதிவு அஞ்சல் மூலம் அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரும், அஞ்சல் தந்திப் போக்குவரத்து தலைமை அலுவலகக் கட்டிடம், லோற்றஸ் வீதி, கொழும்பு 1, என்ற விலாசத்திற்கு, 1969 ம் ஆண்டு ஒகத்து மாதம் 31 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் தள்ளுபடி செய்யப் படும். பரீட்சையின் பெயர் அஞ்சல் உறையின் இடது மேல் மூலையில் " அஞ்சல் அதிபர் தந்தியாளர் பரீட்சை " என்று விளக்கமாக எழுதப்படல் வேண்டும்.

(iii) விண்ணப்பத்தில் குறிப்பிட்ட இடத்தில் 25 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டி அதன்மீது பரீட்சார்த்தி கையெழுத்து வைக்க வேண்டும்.

குறிப்பு :— ஏற்கனவே இத்திணைக்களத்தில் சேவை செய்யும் ஊழியர் கள் அதாவது அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்கு வரத்து அதிபரின் கட்டுப்பாட்டின் கீழ் நியமனத்துக்குட்பட்ட தரங்களில் அல்லது சேவைகளில் பணிபுரிபவர்கள் முத்திரைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

(iv) அரசாங்க சேவையில் ஏற்கனவே சேவை புரிந்து வரும் பரீட்சார்த் திகள் தங்கள் விண்ணப்பங்களை தாங்கள் சேவை புரியும் திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாக அனுப்பவேண்டும். இவ் வாறு செய்யத் தவறும் பரீட்சார்த்திகள் தகுதியற்றவர்களெனக் கணிக்கப்படுவர்.

10. **பரீட்சைப் பிரவேசம் :—**

(i) அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்ட பரீட்சார்த்திகள் எல்லோருக்கும் பிரவேசப்பத்திரங்கள் வழங்குவார். பரீட்சைக்குச் சமூகமளிக் கும் பரீட்சார்த்திகள் தங்கள் பிரவேசப் பத்திரங்களைப் பரீட்சையை மேற்பார்வை செய்வதற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் கொடுக்கவேண்டும். அப்படியான பத்திரத்தைக் கொடாத பரீட் சார்த்தி பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) பரீட்சார்த்திகள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். ஒரு பரீட்சார்த்தி தனக்கு நியமிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தைத் தவிர்ந்த வேறொரு பரீட்சை மண்டபத்தில் சமூகமளிப்பாராயின் அவர் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(iii) நேரசூசி, ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடன் அனுப்பப்படும். பரீட்சார்த்திகளுக்காகிய விதிகள், அவர்களை வழிகாட்டுவதற்கு உரிய குறிப்புகள் இவ்வறிவித்தலின் முடிவில் வேறாகக் கொடுக் கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் இந்த விதிகளால் கட்டுப்படுத் தப்படுவர். இந்த விதிகளை மீறினல் அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரினதும், தீர்மானமே முடிவான தாகும். பரீட்சைக்குச் சமூகமளிக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது பிரவேசப்பத்திரத்தைப் பரீட்சையில் அன்று மேற்பார் வையாளரிடம் கொடுக்க வேண்டும்.

(iv) ஒரு பரீட்சார்த்தியின் பிரவேசப்பத்திரம் குறைந்தது பரீட்சைத் திகதிக்கு ஏழு நாட்களுக்குமுன் அவருக்குக் கிடைக்காவிடின் காலம் தாழ்த்தாமல் கீழ் வரும் தகவல்களைக் கொடுத்துப் பிரவேசப்பத்திரம் தனக்குக் கிடைக்கவில்லையென அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபருக்கும் எழுத வேண்டும்.

(அ) பரீட்சையின் பெயர்.

(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர்.

(இ) தேர்ந்தெடுத்த பரீட்சைத்தானம்.

(ஈ) பூரண தபால் விலாசம்.

(உ) அஞ்சல் அலுவலகப் பதிவிலக்கமும், விண்ணப்பம் பதிவு செய்தனுப்பிய திகதியும்.

11. **பொய்யான விபரங்களைச் சமர்ப்பிப்பதற்குரிய தண்டனை :—**

(i) பரீட்சார்த்தியால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது அவர் அறிந்த வரையில் பொய்யெனக் கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது எந்த முக்கியமான உண்மையும் அவர் வேண்டுமென்று மறைத் திருந்தால் அல்லது அவர் சேவை செய்யும் காலத்தில் எப்பொழு தாவது இப்பரீட்சைக்குத் தோற்றத்தகுதியுடையவரல்லர் என்று நிரூபிக்கப்பட்டால் அவர் உடனே சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

(ii) இப்பரீட்சைக்கான பிரமாணங்களின்படி ஒரு பரீட்சார்த்தி தகுதி யற்றவரெனக் காணப்பட்டால், பரீட்சைக்கு முன்போ, பரீட்சைக் காலத்திலோ, பரீட்சைக்குப்பின்போ, எந்த நேரத்திலாவது அவரது பரீட்சை உரிமை தள்ளுபடி செய்யப்படக்கூடும்.

(iii) பரீட்சைக்கு அனுமதிக்கப்படுதல் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வேண்டிய தகுதியை அங்கீகரித்ததாகாது.

**குறிப்பு** :— அஞ்சல் அதிபர் நாயகமும் தனது உசிதாசாரப்படி ஒரு பரீட்சார்த்திக்குப் பரீட்சை எடுப்பதற்குத் தற்காலிக அனுமதி வழங்கலாம். இத்தகைய அனுமதி பின்னர் உறுதிப் படுத்தப்படலாம். அல்லது தள்ளுபடி செய்யப்படலாம்.

**12. அறிமுக அட்டைகள் :—**

(i) பரீட்சார்த்திகள் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடம் சம்பந்தமாகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படக்கூடியதாகப் பரீட்சை மண்டபத்தில் தாம் இன்னாரென்பதை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டுக் கீழ்க் காணும் சாசனங்களுள் ஏவதாது ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) அஞ்சல் அதிபர் நயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரினாலும் வழங்கப்பட்ட அறிமுக அட்டை.

(ஆ) இப்பரீட்சைத் திகதிக்கு முன் மூன்று வருடங்களுள் வழங்கப்பட்ட செல்லுபடியான பாஸ்போட்.

(இ) இப்பரீட்சைக்கு முன் மூன்று வருடங்களுள் ஒரு அரசாங்கப் பகுதியின் அதிகாரத்துடன் வழங்கப்பெற்ற, வைத்திருப்பவரின் புகைப்படத்தைக் கொண்ட ஒரு அத்தாட்சிப் பத்திரம், லைசென்ஸ் பத்திரம் அல்லது வேறு சாசனம்.

(ii) தமது பிரவேசப் பத்திரத்துடன் மேலே குறிப்பிட்ட சாசனங்களுள் ஒன்றினை வைத்திராது பரீட்சார்த்தி எவரும் பரீட்சைக்கு அனுமதிக் கப்படமாட்டார்.

**13. தகுதிச்சான்றுப் பத்திரங்கள் :—**

(i) விண்ணப்பத்துடன் எவ்வித பத்திரங்களையும் இணைத்தல் கூடாது. ஆனால் விண்ணப்பப்பத்திரத்தில் கேட்டுள்ள தேவையான விபரங்கள் யாவும், அதில் குறிக்கப்படல் வேண்டும். தேவையான விபரங்கள் யாவையும் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் அவற்றின் தகுதிக்கேற்றவாறு நிராகரிக்கப்படலாம்.

(ii) தகுதி பெற்ற பரீட்சார்த்திகள் தமது தகுதியை நிரூபித்தற்காகிய பத்திரங்களைக் காட்டக்கூடியதாயிருக்க வேண்டும். அத்தகைய பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின்போது அவற்றை நேரிற் காட்ட வேண்டும். அல்லது அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரும் கோரினால் பதிவு அஞ்சல் மூலம் உடனே அவற்றை அனுப்பி வைத்தல் வேண்டும்.

(iii) கீழ்வரும் சான்றுப்பத்திரங்கள் தேவையாகும் :—

(அ) பொறுப்பு வாய்ந்த ஒருவரால் கையொப்பமிடப்பட்ட நற்சாட்சிப் பத்திரம்.

(ஆ) கல்வித் தகைமை பற்றிய மூல அத்தாட்சிப்பத்திரம், அல்லது அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்படாதிருக்குமிடத்து, உத்தியோக பூர்வமான பிறசாதனம் (உ–ம்.) இலங்கை பொதுக் கல்வித் தராதரம் (சாதாரண தரம்) தனிப்பட்ட பரீட்சார்த்தி வழங்கப்பட்ட பெறுபேற்று அறிவிப்புத் துண்டு அல்லது பரீட்சார்த்தியின் பாடசாலை அதிபரிடமிருந்து பெற்ற மூலக் கடிதம்.

(இ) இலங்கைப் பிரசையாகப் பதிவு பெற்றதற்குரிய சான்றுப் பத்திரம் அல்லது வம்சாவழிப் பிரசாஉரிமை கோரினால் அக்கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டதைக் காட்டும் உத்தியோக பூர்வமான மூலக் கடிதம். (தேவையான விடத்து)

(ஈ) பரீட்சார்த்தியின் பிறப்புப் பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது (பிறப்பு பதிவு செய்யப்படாத பரீட்சார்த்திகளின் பொருட்டு) பதிவுகாரியகர்த்தரால் கொடுக்கப்பட்ட விஷேச வயது சாட்சிப்பத்திரம். பிறப்புச் சான்றற்ற பரீட்சார்த்தி ஒருவர் தமது நேர் தகவு வயதுச் சான்றிதழைமட்டும் தரும்பொழுது, அவர் அச்சான்றிதழிற் குறிப்பிடும் பிறப்பு ஆண்டின் ஜூலை முதலாந் திகதி பிறந்தவராகக் கருதப்படுவார்.

**குறிப்பு** :—(i) பாடசாலையிற் சேர்த்தற்காகப் பெறப்பட்ட விசேட பிறப்புச் சாட்சிப்பத்திரம் அல்லது பிறப்புப் பதிவுப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சுருக்க விபரப் பிரதி அங்கீகரிக் கப்படமாட்டாது.

(ii) பிறப்புச் சாட்சிப்பத்திரங்களுக்குப் பதிலாகச் சத்தியக் கடதாசிகள் அல்லது ஞானஸ்நானப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(iii) பிறப்பத்தாட்சிப் பத்திரத்திலுள்ள பெயர்/பெயர்கள் பரீட்சார்த்தி சாதாரணமாக உபயோகிப்பதும்—உபயோகிப்பனவும் இப்பரீட்சை எடுப்பதற்குக் கொடுத்துள்ளதும்/கொடுத்துள்ளனவுமான பெயரின்னிறும் வேறுபட்டால், பிறப்புப் பதிவிலுள்ள பெயரைத் திருத்துவதற்கு, 1951 ம் ஆண்டின் 17ம் இலக்கப் பிறப்பு இறப்பு பதிவுச் சட்டத்தின் 27 ம் அல்லது 28 ம் பிரிவின் நியதிகளின்படி உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 1953 ம் ஆண்டின் 15 ம் இலக்கப் பிறப்பு இறப்புப் பதிவுச் (திருத்தச்) சட்டத்தின் 2 ம் பிரிவின்படி திருத்தப்பட்ட 1951 ம் ஆண்டில் 17 ம் இலக்கப் பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டத்தின் 24 (6) ம் பிரிவின் படி பிறந்த திகதியிலிருந்து ஓராண்டுக்கு மேற்பட்ட காலத்தின்பின் பதிவு செய்யப்பட்ட பிறப்புப் பதிவின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி, பிறந்த திகதியை நிறுவுவதற்கு அதன்கண் கொடுக் கப்பட்டுள்ள சான்றினைச் சீர்தூக்கி ஆராய்ந்ததன் பின்னரே நியமனங்கள் செய்யும் தேவைகளுக்காக ஏற்றுக்கொள்ளப் படும்.

அரசாங்க உத்தியோகத்தில் இருந்துகொண்டு 18.8.57 ம் 394 ம் இல. திறைசேரி சுற்றக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தம் பெயர்களை மாற்றியிருக்கும் பரீட்சாத்திகள் பிறப்பு பதிவிடாப்பில் உள்ள தம்பெயர்களை மாற்ற நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று கேட்கப்படமாட்டார்கள்.

(iv) விண்ணப்பஞ்செய்யும்போது பரீட்சாத்திகள் எல்லாச் சான்றுப் பத்திரங்களையும் தயாராக வைத்திருக்க வேண்டுமென்று எச்சிரிக்கை செய்யப்படுகின்றனர். நேர்முப் பரீட்சையின் போது தேவையான சான்றுப் பத்திரங்களைக்காட்ட முடியாதிருக்கும் அல்லது அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரும் கோரும்போது சான்றுப்பத்திரங்களைக் காட்டத் தாமதிக்கும் பரீட்சார்த்தியின் பதிவு நிராகரிக்கப் படும்.

**14. கட்டணம் திருப்பிக் கொடுத்தல் :—**

(i) எந்தச் சந்தர்ப்பத்தை முன்னிட்டும் கட்டணப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

(ii) இந்தப் பரீட்சைக்குச் செலுத்திய கட்டணப்பணத்தை வேறெப் பரீட்சைக்கும் உபயோகிக்கமுடியாது.

**15. பரீட்சைத் திட்டம் :—**

இப்பரீட்சைக்குரிய பாடங்களும் அவற்றுக்குரிய புள்ளிகளும் கீழே தரப்பட்டுள்ளன. எழுத்தில் நடக்கும் பரீட்சைகளில் கூடாத எழுத்து எழுத்துப்பிழைகள் முதலியவற்றிற்குப் புள்ளிகள் கழிக்கப்படும். விளக்கமற்ற கையெழுத்து எழுதுவோர் பரீட்சைக்குத் தகுதியற்றவராகக் கணிக்கப்படுவர்.

| 1 ம் பகுதி | புள்ளிகள் |
|---|---|
| (1) சிங்கள/தமிழ்/ஆங்கில பாஷையும் வியாசமும் (1½ மணி நேரம்) .. .. .. | 150 |
| (2) பொது அறிவும் இலங்கை பற்றிய அறிவும் (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் ஒரு மணி நேரம்) .. | 100 |
| (3) எண்கணிதம் கூட்டல் உட்பட (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் 45 நிமிட நேரம்) .. .. | 100 |
| (4) பொது விவேகம் (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் 45 நிமிட நேரம்) .. .. | 100 |
| (5) சிங்கள/தமிழ்/ஆங்கில சொல்வதெழுதல் .. | 100 |
| (6) பூமிசாத்திரம் (இலங்கையும் உலகமும்) (சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்) .. .. | 100 |

அஞ்சல் அலுவலக கரும விளக்கம், அஞ்சல் அலுவலக விதிகள் ஆகியவற்றில் காட்டியவாறு கருமபீட வேலைகளுடன் தொடர்புபட்ட திணைக்கள நடைமுறையில் ஒரு வினாப்பத்திரமும் தயாரிக்கப்படும். ஒதுக்கப்பட்ட 50% வீத காலியான இடங்களுக்குப் போட்டியிடும் அஞ்சல் தந்தி திணைக்களத்தைச் சேர்ந்த எல்லா ஊழியர்களும் பொதுப் போட்டியிலோ அல்லது மட்டுப்படுத்தப்பட்ட போட்டியிலோ பூமிசாத்திர (இலங்கையும் உலகமும்) பாடத்திற்குப் பதிலாக இப்பாடத்தை எடுக்க அனுமதிக்கப்படுவர்.

**குறிப்பு.**—பந்தி 5 (எ) (ii) ல் குறிப்பிட்டுள்ளவர்களைத் தவிர்த்து, அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் திணைக்களத்தில் முன்னரே நியமிக்கப் பட்ட மற்றைய சகல ஊழியர்களும் பூமிசாத்திர (இலங்கையும் உலகமும்) பாடத்திலுள்ள வினாப்பத்திரத்தை எடுத்தல் வேண்டும்.

**2 ம் பகுதி**

| | |
|---|---|
| நேர்முகப் பரீட்சை (பரீட்சார்த்தி பரீட்சைக்கு எந்த மொழியிற் தோற்றுகின்றாரோ அந்த மொழியிலே நேர்முகப் பரீட்சை நடைபெறும்) : .. .. .. | 100 |

16. பரீட்சை இரு பகுதிகளாக நடாத்தப்படும் 1 ம் பகுதி முதலில் நடைபெறும். இதன் முடிவுகளைக் கொண்டு நேர்முகப் பரீட்சைக்குப் போட்டி முறையில் தகுதி பெற்ற பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படுவர். இப்பரீட்சை கொழும்பில் நடைபெறும். இதற்குரிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க வேண்டிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையை அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரும் நிர்ணயிப்பார். நேர்முகப் பரீட்சை நடவாதுவிட்டவும் கூடும்.

17. **பரீட்சைப் பெறுபேறுகளைப் பிரசுரித்தலும் உத்தியோகத்தர்களை நியமித்தலும்.**—சித்தியெய்திய பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கை அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்டு, இடங்கள் காலியாக வரும் போது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

18. இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைக் கவனிக்கவும்.

வி. எம். அபயசேகரா,
அஞ்சல் அதிபர் நாயகமும்
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரினது அலுவலகம்,
6 வது மாடி,
அஞ்சல் தந்தி போக்குவரத்துத் தலைமை அலுவலகக் கட்டிடம்,
டியூக் வீதி,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு யூலை மீ 11 ந் உ.

## பரீட்சைப் பகுதி, இலங்கை

### பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடத்துகொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்:—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்ற பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமை யுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ—வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படமோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலைசெய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடை யெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ் விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்கு பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டியமாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப்பெட்டியையோ விட கைப்பை அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றையோ கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறவரிடமிருந்தோ

உதவி பெறவுங் கூடாது. விடை யெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக் கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளினும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாக்க குறிப்பிடுதல் வேண்டும். விடை யெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்பரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்கு மிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்படவேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்படவேண்டும் அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டுருபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தை காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்

(ix) ஒவ்வொரு படத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி **நெருக்கமாகவும் உறுதியாகவும்** ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லை யென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

கே. ரீ. டபிள்யூ. சுமனசூரிய,
பதில் பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு 2.

7—801—18.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,863

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கொழும்பு உப பிரிவு

கீழே சொல்லப்பட்ட வேலைக்கு கேள்விப் பத்திரம் கொழும்பு 5, ஜாவத்த வீதியிலுள்ள மேற் பிரிவு பெரும்பாக பொறியியலாளர் அவர்களால் 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 30 ந் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனே திறக்கப்படும்.

2. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வேலைக்கு நேராக உள்ள தொகைக்கோ அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களுமே இவ்வேலைகளுக்குக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

| | வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரரின் பதிவுத் தொகை | கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. | கொற தொட்ட சிறு வெள்ளப்பாது காப்புத் திட்டம் | ரூ. 75,000/- | ரூ. 100/- |

3. இக்கேள்விகளுக்காகிய வெற்றுப் பத்திரங்களை கொழும்பு, கழுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி ஆகிய உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் காரியாலயங்களின் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு 27 ந் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விக்காரர்களாக முன் வருவோரைக் கேள்விப் பத்திரங்கள் சமர்பிக்கத் தகுதியுடையவர்களா அல்லவா என்று ஆராய்ந்தறியும் பொருட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குத் தங்கள் பதிவுப் புத்தகத்துடன், தாங்கள் தற்போது இத் திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவைகளின் பெறுமதிகளையும் ஓர் பத்திர மூலம் கேள்விக்காரர்களாக முன் வருவோர் வெற்றுப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் பெறுமுன் 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 27 ந் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அலுவலக நேரத்தில் மேற் கூறிய கேள்விக் கட்டணத்தை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்திற் கட்டவேண்டும் அல்லது ஒரு கச்சேரியில் கட்டிய பற்றுச் சீட்டைச் சமர்பித்தல் வேண்டும்.

4. மேற்படி வேலைகளைப் பற்றிய படங்களையும் வேறு தேவையான விபரங்களையும் அலுவலக நேரங்களில் கொழும்பு உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஐ. எச். பெரேரா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்
கொழும்பு உபபிரிவு.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
ஜாவத்த வீதி,
கொழும்பு 5.

7—713—18.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,863.

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### புத்தளம் உப பிரிவு

கீழ்க்காணும் வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் வடமேல் பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரால் அவரின் குருநாகல் அலுவலகத்தில் 29.7.69 முற்பகல் 10 மணி வரையும் பெற்று உடனே திறக்கப்படும்.

| வேலைகளின் விபரம் | பதிவுத் தொகை ரூபா | | கேள்விக் கட்டணம் ரூபா | | மாச வேலை விகிதம் |
|---|---|---|---|---|---|
| (i) கடவலைக்குளம் இடது வலது வாய்க்கால் திருத்துதல் | 20,000 | .. | 25 | .. | 50% |
| (ii) இரணை வீடு, கிணறு கட்டுதல்—கடவலைக் குளம் | 30,000 | .. | 50 | ... | 25% |

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேலே கூறப்பட்ட தொகைக்கும் அதற்கு மேலும் பதிவு செயயப்பட்ட ஒப்பந்தகாரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்குரிய பத்திரங்கள் நீர்ப்பாசன அலுவலகம், புத்தளம், நிக்கவரட்டியா ஆகிய இடங்களில் அலுவலக நேரங்களில் 18.7.69 தொடக்கம் 25.7.69 வரையும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது அரசாங்கத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் நிரூபிக்கக் கூடிய அத்தாட்சிப் பத்திரத்துடன் கேள்விப் பத்திரத்தைக் கோர வேண்டும்.

4. வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் கேள்விக் கட்டணமாக மேலே காட்டிய தொகையை ஏதாவதொரு கச்சேரியிற் செலுத்திப் பற்றுச் சீட்டுக் காட்டினுலும் போதுமானது.

5. இக்கேள்விக்காய மேலதிக விபரங்களை எனது அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

க. மு. சுப்பிரமணியன்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
புத்தளம் உப பகுதி.

7–744—18.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,863

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மகாகனந்தராவ உப பிரிவு

மகாகனந்தராவ பிரிவில் கீழ்க்காணும் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் அனுராதபுரத்திலுள்ள வட மத்திய பிரிவு பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினுல் 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ம் திகதி காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின் உடனே திறக்கப்படும்.

| கேள்விப் பத்திர இலக்கம் | வேலையின் விபரம் | பதிவுததொகை ரூபா | | கேள்விக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| MKL 17 .. | மகாகனந்தராவ இடப்பக்கப் பிரதான வாய்க்கால் அமைத்தல் 10 க. 1,900 அடி–10 க. 4,000 அடி வரை | 40,000 | .. | 50 |
| MKL 18 .. | ஷை 10 க. 4,000 அடி–11 கட்டை வரை | 40,000 | .. | 50 |
| MKL 19 .. | ஷை 11 க.–11 க. 2,000 அடி வரை | 40,000 | .. | 50 |
| MKL 20 .. | ஷை 11 க. 2,000 அடி–11 க. 2,800 அடி வரை) | 40,000 | .. | 50 |
| MKL 21 .. | ஷை 11 க. 2,800 அடி–12 க. வரை) | 40,000 | .. | 50 |
| MKL 22 .. | ஷை 12 க.–12 க. 4,000 அடி வரை | 40,000 | .. | 50 |
| MKL 23 .. | கோணுகத்தருவ குளத்துப் புனருத்தாரண வேலை | 75,000 | .. | 100 |
| MKL 24 .. | முறியக்கடவெல குளத்துப் புனருத்தாரண வேலை | 25,000 | .. | 25 |

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்குறிப்பிட்ட தொகைக்கோ அல்லது அதற்கு மேலோ பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் கூட்டுறவு மொத்த ஸ்தாபனங்கள் கிராம முன்னேற்றச சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக்கேள்விகளுக்கான வெற்றுப்பத்திரங்களை மகாகனந்தராவ, அனுராதபுரம், ருசாங்கனை, பதவியா ஆகிய உப பிரிவு நீர்ப்பாசனக் காரியாலயங்களில் காரியாலய நேரங்களில் 2.8.69 நண்பகல் 12 மணி வரை மேலே காட்டிய கேள்விக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இக்கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியிற் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினுலும் போதுமானது.

கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவு புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொணடுள்ள வேலைகளையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இக்கேள்விகளுக்கான மேலதிக விளம்பரங்கள் எல்லாவற்றையும் மகாகனந்தராவ உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

டி. ஈ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மகாகனந்தராவ உப பிரிவு.

மிகிந்தலை,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 5 ந் வ.

7–721—18.7.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,863

---

## ஆயுள்வேத இலாகா

### அநுராதபுர் ஆயுள்வேத வைத்தியசாலைக்குப் பாகப்படுத்திய மருந்துகள் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ம் திகதிவரையுள்ள காலத்திற்குப் பாகப்படுத்திய மருந்துகள் செய்வதற்கான கேள்விப் பத்திரங்களை இதனுடன் அணைக்கப்பட்ட அட்டவணையிற் குறிப்பிட்ட பிரகாரம் அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு வியாபார நிலையம், தனிப்பட்ட வியாபார நிலையம் ஆகியனவுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து 9.8.68 முற்பகல் 10 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இப்பத்திரங்கள் அரசாங்க முத்திரையிடப்பட்டு ஆயுள்வேத அதிகாரி, ஆயுள்வேத இலாகா, 325, கொட்டா வீதி, கொழும்பு 8, என விலாசமிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

2. கேள்விப்பத்திரங்கள் அரக்கு முத்திரையிடப்பட்டு உறையின்மேல் இடதுபக்க மூலையில் கேள்விப்பத்திரங்களின் பெயர், விலாசத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு ஆயுள்வேத அதிகாரி, ஆயுள்வேத இலாகா, 325 கொட்டா வீதி, கொழும்பு 8, என விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும்

3. கேள்விப் பத்திரங்கள் பதிவுத்தபாலில் ஆயுள்வேத அதிகாரி, ஆயுள்வேத இலாகா, 325, கொட்டா வீதி, கொழும்பு 8 என்ற விலாசத்தில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்பாத கேள்விப் பத்திரகாரர்கள் தாமாகவோ அல்லது அவரின் பிரதிநிதி மூலமாக நேர்முகமாக அனுப்பி மேற்படி விலாசத்தில் இருக்கும் காரியாலய உதவியாளரிடம் ஒப்படைக்கவேண்டும். கேள்விப்பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டதும், அதற்கான ரசீது கேள்விப் பத்திரங்களுக்கு உதவிக் காரியதரிசியால் வழங்கப்படும். குறிப்பிட்ட முடிவு திகதி முற்பகல் 10 மணிக்குப் பின்னர் கிடைக்கும் எக்கேள்விப் பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரக்காரர் கேள்விப் பத்திரங்களை திறப்பதற்காக குறிப்பிட்ட நேரம், திகதி, இடத்தில் பிரசன்னமாவதற்கு அனுமதிக்கப்படுவர். கேள்விப்பத்திரக்காரரின் முன்னிலையில் கேள்விப்பத்திரக்காரரின் பெயர்

களும், விபரங்களும வாசிக்கப்படும். கேள்விப்பத்திரக்காரர் யாரேனும் தமது கேள்விபபத்திரத்தை திரும்பவும் பரிசீலனை செயயவிரும்பினுல் ஒபபடைககபபட்ட கேள்விபபத்திரத்தின பிரதியை கேள்விப்பத்திர சபைத் தலைவருடைய ஒழுங்கினபடி மீண்டும் பரிசீலனைசெயய அனுமதிக்கப் படுவர்.

5. கீழே குறிப்பிடப்பட்ட 2 வது பந்தியின்படி கட்டுப்பணத்தை கொழும்புக் கச்சேரி தவிர்நத ஏனைய கச்சேரிகளிலோ அல்லது கொழும்பு யோர்க் வீதியிலுள்ள இலங்கை வங்கியில் கட்டுப்பணத்தைச் செலுத்து வதற்கான பத்திரஙகள் கொழும்பு 8, கொட்டா ரேட்டிலுள்ள 325 ம் இலக்க ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியிடம் பெற்றுக்கொளளலாம். கட்டுப்பணத்திற்கான பத்திரமன்றி பணம் செலுத்த இலங்கை வங்கி அனுமதியளிக்கமாட்டாது. மனுதார் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை ஆயுள்வேத வைத்தியசாலையிலிருக் கும் வைத்திய அதிகாரியின் கந்தோரில் ஒப்படைத்து, தேவையான கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தபால் மூலம் கேள்விப் பத்திரஙகள் பெறவிரும்பின் பணம் செலுத்திய பற்றுச்சீட்டை முன்கூட்டியே அனுப்பினுல் தகுந்த காலத்தில் அனுப்பிவைக்கப்படும்.

இதர விபரங்கள் கொழும்பு 8, கொட்டா ரேட்டிலுள்ள 325 ம் இலக்க ஆயுள்வேத மத்திய வைத்தியசாலையின் வைதத்திய அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம.

டபிளயு. ஜே. ஆர். நவகமுவ,
ஆயுள்வேத அபிவிருத்தி அதிகாரி.

கொட்டா ரேட்,
கொழும்பு 8,
1969 ம் ஆம் ஜுலை மீ 9 ந் உ.

அட்டவணை

| சேவை | கேள்விப் பத்திரக் கட்டுப்பணம் | பிணைப்பணம் | கேள்வி முடிவு திகதி |
|---|---|---|---|
| 1.10.69 தொடக்கம் 30.9.70 வரை அநுராதபுர ஆயுளவேத வைத்தியசாலைக்கு பாகபபடுத்திய மருந்துகள் விநியோகம் செயதல்<br>அவையாவன :—<br>i அரிஷ்டம்<br>ii ஆசவம்<br>iii சூரணம்<br>iv குளிகைகள்<br>v தைலம்<br>vi குக்குள்<br>vii லேகியம்<br>viii இரசாயனமும் அவலேகமும்<br>ix க்ருதம்<br>x பாணி (சிறப்)<br>xi கலகம்<br>xii மற்றும் சூரணம், லேகியம் | ரூபா 100 | கேள்விபபத்திர முழுத் தொகையில ஐந்து (5%) வீதம் | 9.8.69 |

7–741/1 18.7.69 ந் தேதிய வாததமானி இல. 14,865

## ஆயுள்வேத இலாகா

### இரத்தினபுரி ஆயுள்வேத வைத்தியசாலைக்குப் பாகப்படுத்திய மருந்துகள் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்

1969 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ம் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ம் திகதிவரையுள்ள காலத்திற்குப் பாகப்படுத்திய மருந்துகள் செய்வதற்கான கேள்விப் பத்திரங்களை இதனுடன் அணைக் கப்பட்ட அட்டவணையிற் குறிப்பிட்ட பிரகாரம் அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு வியாபார நிலையம், தனிப்பட்ட வியாபார நிலையம் ஆகிய வைவுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து 9.8.69 முற்பகல் 10 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இப்பத்திரங் கள் அரசாங்க முத்திரையிடப்பட்டு ஆயுள்வேத அதிகாரி, ஆயுள்வேத இலாகா, 325, கொட்டா வீதி, கொழும்பு 8, என விலாசமிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.

2. கேள்விப்பத்திரங்கள் அரக்கு முத்திரையிடப்பட்டு உறையின்மேல் இடதுபக்க மூலையில் கேள்விப்பத்திரங்களின் பெயர், விலாசத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு ஆயுள்வேத அதிகாரி, ஆயுள்வேத இலாகா, 325 கொட்டா வீதி, கொழும்பு 8, என விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் பதிவுத்தபாலில் ஆயுள்வேத அதிகாரி, ஆயுள்வேத இலாகா, 325, கொட்டா வீதி, கொழும்பு 8 என்ற விலாசத் தில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் கேள்விப் பத்திரங் களை அனுப்ப விரும்பாத கேள்விப்பத்திரகாரர்கள் தாமாகவோ அல்லது அவரின் பிரதிநிதி மூலமாக நேர்முகமாக அனுப்பி மேற்படி விலாசத்தில் இருக்கும் காரியால்ய உதவியாளரிடம் ஒப்படைக்கவேண்டும். கேள்விப்பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டதும், அதற்கான ரசீது கேள்விப் பத்திரங்களுக்கு உதவிக் காரியதரிசியால் வழங்கப்படும். குறிப்பிட்ட முடிவு திகதி முற்பகல் 10 மணிக்குப் பின்னர் கிடைக்கும் எக்கேள்விப் பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரக்காரர் கேள்விப் பத்திரங்களை திறப்பதற்காக குறிப் பிட்ட நேரம், திகதி, இடத்தில் பிரசன்னமாவதற்கு அனுமதிக்கப்படுவர். கேள்விப்பத்திரக்காரரின் முன்னிலையில் கேள்விப்பத்திரக்காரரின் பெயர் களும், விபரங்களும் வாசிக்கப்படும். கேள்விப்பத்திரக்காரர் யாரேனும் தமது கேள்விப்பத்திரத்தை திரும்பவும் பரிசீலனை செய்யவிரும்பினுல் ஒப்படைக்கப்பட்ட கேள்விப்பத்திரத்தின் பிரதியை கேள்விப்பத்திர சபைத் தலைவருடைய ஒழுங்கின்படி மீண்டும் பரிசீலனைசெய்ய அனுமதிக்கப் படுவர்.

5. கீழே குறிப்பிடப்பட்ட 2 வது பந்தியின்படி கட்டுப்பணத்தை கொழும்புக் கச்சேரி தவிர்ந்த ஏனைய கச்சேரிகளிலோ அல்லது கொழும்பு யோர்க் வீதியிலுள்ள இலங்கை வங்கியில் கட்டுப்பணத்தைச் செலுத்து வதற்கான பத்திரங்கள் கொழும்பு 8, கொட்டா ரேட்டிலுள்ள 325 ம் இலக்க ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம். கட்டுப்பணத்திற்கான பத்திரமன்றி பணம் செலுத்த இலங்கை வங்கி அனுமதியளிக்கமாட்டாது. மனுதார் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை ஆயுள்வேத வைத்தியசாலையிலிருக் கும் வைத்திய அதிகாரியின் கந்தோரில் ஒப்படைத்து, தேவையான கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தபால் மூலம் கேள்விப் பத்திரங்கள் பெறவிரும்பின் பணம் செலுத்திய பற்றுச்சிட்டை முன்கூட்டியே அனுப்பினுல் தகுந்த காலத்தில் அனுப்பிவைக்கப்படும்.

இதர விபரங்கள் கொழும்பு 8, கொட்டா ரேட்டிலுள்ள 325 ம் இலக்க ஆயுள்வேத மத்திய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம்.

டபிள்யு. ஜே. ஆர். நவகமுவ,
ஆயுள்வேத அபிவிருத்தி அதிகாரி.

கொட்டா ரேட்,
கொழும்பு 8,
1969 ம் ஆம் ஜுலை மீ 9 ந் உ.

அட்டவணை

| சேவை | கேள்விப் பத்திரக் கட்டுப்பணம் | பிணைப்பணம் | கேள்வி முடிவு திகதி |
|---|---|---|---|
| 1.10.69 தொடக்கம் 30.9.70 வரை இரத்ராதபுர ஆயுள்வேத வைத்தியசாலைக்கு பாகப்படுத்திய மருந்துகள் விநியோகம் செய்தல்<br>அவையாவன :—<br>i அரிஷ்டம்<br>ii ஆசவம்<br>iii சூரணம்<br>iv குளிகைகள்<br>v தைலம்<br>vi குக்குள்<br>vii லேகியம்<br>viii இரசாயனமும் அவலேகமும்<br>ix க்ருதம்<br>x பாணி (சிறப்)<br>xi கல்கம்<br>xii மற்றும் சூரணம், லேகியம் | ரூபா 100 | கேள்விப்பத்திர முழுத் தொகையில் ஐந்து (5%) வீதம் | 9.8.69 |

7–741/2—18.7.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,863

## ஆயுள்வேத இலாகா

### சலவை ஒப்பந்தம்

1969 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ம் திகதி முதல் 1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ம் திகதி வரை நாவின்னயில் உள்ள ஆயுள்வேத ஆராய்ச்சி நிலயத்தின் அழுக்குத் துணிகளைக் கழுவுவதற்கான சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 9.8.69 காலை 10.00 மணிவரை ஆயுள்வேத ஆணையாளர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் தாக்கல் செய்யும் கடைசித் திகதியின் பின்னர், அவைகள் கேள்விப்பத்திரக்காரரின் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்பட்டு அவர்களின் பெயர்களும், கட்டணங்களும் வாசிக்கப்படும்.

2. கேள்விப் பத்திரங்களை பெறவிரும்புவோர், ஆயுள்வேத ஆணையாளரிடமோ அல்லது அவரின் பெயரில் கச்சேரியிலோ பத்து ரூபாவினைக் (ரூபா 10) கட்டி, அதன் ரசீதினைக்கொண்டு கந்தோர் உதவியாளரிடம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை இரட்டைப் பிரதிகளாக ஆயுள்வேத ஆணையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விக் விப்பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டமை ஆயுள்வேத ஆணையாளரால் அளிக்கப்படும். அல்லது கேள்விப்பத்திரக்காரர்கள் அவரின் பிரதிநிதி மூலமாக தனிப்பட்ட முறையில் நேர்முகமாக ஆணையாளரின் கந்தோரில் சமர்ப்பிக்கலாம். கேள்விப்பத்திரக்காரர் விரும்பினால் அவரின் கேள்விப் பத்திரங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் தாக்கல்செய்யும் கடைசித் திகதியன்று நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக ஒப்படைக்கப்பட வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அதற்குரிய பத்திரங்களில் அனுப்பப்படாதவை கவனிக்கப் படமாட்டாது. குறிப்பிட்ட முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் கவனிக்கப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரக்காரர் தமது கேள்விப்பத்திரத்தின் பிரதியை ஆயுள்வேத ஆணையாளரிடம் சமர்ப்பித்து தமது கேள்விப்பத்திரத்தினைத் திரும்பவும் பரிசீலனை செய்யலாம்.

5. தெரிவு செய்யப்படும் கேள்விப்பத்திரக்காரர் கேள்விப்பத்திர முழுத்தொகையின் ஐந்து வீதத்தினைப் (5%) பிணைப்பணமாகக் கட்டுவதற்கும், ஓர் உடன்படிக்கை ஒப்பந்தத்திலும் கையொப்பமிடல் வேண்டும் எனக் கேட்கப்படுகின்றனர். கட்டுப்பணம் கட்டிய பத்திரக்காரர் திருப்தியற்றவராகில் அவரின் கட்டுப்பணம் வேறு ஒரு திருப்தியுள்ள பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டபின் திருப்பிக் கொடுக்கப்படும்.

6. இது சம்பந்தமாக முழுவிபரமும் ஆயுள்வேத ஆணையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

டபிள்யூ. ஜே. ஆர். நவகமுவ,
